இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள் விடைகள். வினா எண் 161, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

161—

மின் சமிக்ஞை

***33360—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் மின் சமிக்ஞை அமைக்கப்பட்டும் செயல்படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த மின் சமிக்ஞைப் போக்குவரத்தை நெறிமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) விருத்தாசலம் நகரம், பாலக்கரை ரவுண்டானாவில் அமைக்கப்பட்டிருந்த மின் சமிக்ஞை—Electrical signal—பழுது நீக்கம் செய்யப்பட்டு 25-6-2004 முதல் நல்ல முறையில் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 மார்ச் 16]

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் நகரம், மக்கள் அதிகம் நடமாடக்கூடிய பகுதி. விபத்துகள் ஏற்படாமல் தடுக்கக்கூடிய பகுதிகள் என்று இரண்டு இடங்கள் கண்டறியப்பட்டு, விருத்தாசலம், பாலக்கரை ரவுண்டானா என்ற இடத்திலும், கடை வீதியிலும் மின் சமிக்ஞைகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்டன. படாடோபமாக அமைக்கப்பட்ட மின் சமிக்ஞைகள் பத்து நாட்கள்கூட வேலை செய்யவில்லை. இதுதான் உண்மை. நான் அந்த ஏரியாக்காரன். அந்த ஊரில் இருக்கிறேன்; Daily அந்தப் பக்கம் போய்க் கொண்டிருக்கிறேன். எனக்குத் தெரிந்த உண்மை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்லவர். அவருக்குத் தவறான தகவல்களை அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தவறான தகவலை இந்த மாமன்றத்திற்கு அவர் தெரிவிக்கின்றார். உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். இதுநாள் வரையில்... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவிந்தசாமி, கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: 10 நாட்கள்கூட, அந்த மின் சமிக்ஞைகள் வேலை செய்யவில்லை என்பதைக் கண்கூடாக நான் நேற்று இரவுகூடப் பார்த்துவிட்டு இன்று காலைதான் வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைக் கேள்வியாகப் போடுங்கள்.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: அந்த மின் சமிக்ஞைகள் மீண்டும் இயங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா; அப்படியென்றால் எப்போது என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட அந்தப் பகுதியில் மின் சமிக்ஞை 25–6–2004 முதல் இயக்கப்பட்டது. இதுவெல்லாம் mechanism-தான்; இதில் சில நேரங்களில் இடையூறுகளும், தடைகளும் ஏற்படுவது எல்லாம் சகஜம்தான். அந்தவகையிலே, இயங்கிவந்த அந்த மின் சமிக்ஞையில் இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, பழுது ஏற்பட்டிருந்தால் அந்தப் பழுது உடனடியாகச் சரி செய்யப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவிந்தசாமி.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். நான் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை. 10 நாட்கள்கூட வேலை செய்யவில்லை. அதுதான் உண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவிந்தசாமி, உங்களைச் சந்தேகப்படவில்லை. மறுபடியும் மின் சமிக்ஞை பழுது நீக்கப்படுமா என்று கேளுங்கள்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்லியிருக்கிறேன். அதை இப்போதுதான் என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். பழுது ஏற்பட்டால் உடனுக்குடன் பழுது நீக்கப்படும் என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 162, திரு. இரா. வில்வநாதன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

162—

போக்குவரத்துப் பணிமனை

***39829—திரு. இரா. வில்வநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் பேரூராட்சியில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை ஒன்று ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதி, சோளிங்கர் பேரூராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள அரசாணையின்படி அரசுப் போக்குவரத்துப் பணிமனை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.